கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

**O.S. 24/2021**

**Date:26.08.2022**

பெயர் பார்த்திபன் பி.வா..சா.1 அனுமதி பேரில் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

நான் 15 வருடங்களாக கட்டிட ஒப்பந்ததாராக பணியாற்றி வருகிறேன். வாதியை 15 வருடமாக தெரியும். வாதியும் கட்டிட ஒப்பந்த வேலை செய்கிறார் என்றால் சரிதான். வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். வாதி அவரிடம் நான் வாங்கிய பணத்தை திரும்ப கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2015 ல் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆனது. உடல்நலம் சரியில்லாமல் போனதால் அந்த வருடம் நான் ஒப்பந்த பணிகளை நான் சரியாக செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் கட்டிட ஒப்பந்த பணிகள் எதுவும் என்னிடம் இல்லை. 2018 ல் தான் திரும்பவும் கட்டிட ஒப்பந்த பணிகள் எடுக்க ஆரம்பித்தேன். எனக்கு டிப்பரஸ்ஸன் என்ற பாதிப்பு இருந்தது. அதற்கு நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை. ஆனால் வீட்டில் இருந்தவாறு சிகிச்சை பெற்றேன். நான் வாதியிடம் 20.01.2020 ல் 10 லட்சமும், 29.02.2020 ல் 10 லட்சமும், 25.06.2020 ல் 8 லட்சமும் காசோலை மூலம் பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் அது தவறு. அவர் எனக்கு தரவேண்டிய பணத்தைதான் மேற்கண்டவாறு காசோலை மூலம் திரும்ப கொடுத்தார். எனக்கு தரவேண்டிய பணம் குறித்து நண்பர்கள் முன்னிலையில் பேசப்பட்டு பணம் காசோலை மூலம் தருவதாக அவர் ஒப்புக்கொண்டு ஒரு ஆவணம் எழுதப்பட்டு அதன் அடிப்படையில்தான் காசோலை கொடுத்தார். எந்த தேதி மாதத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் தேதி, மாதம் நினைவில் இல்லை. அதன் நகல் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. நீதிமன்றத்தில்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சக்திவேல் மற்றும் சுரேந்திரன் (எ) தமிழேந்தி ஆகிய இருவர் சமரசம் பேசினார்கள். எனக்கு ரூ.50 லட்சம் வாதி தரவேண்டியிருந்தது. ஆனால் முதலில் 28 லட்சம் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தார். அதற்காகத்தான் காசோலை கொடுத்தார். நான் சொல்வதுபோல் ஒப்பந்தம் எதிலும் வாதி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எவ்வித பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தரவேண்டிய தொகையை ஏமாற்றும் நோக்கில் நான் பொய்க்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. யார் யார் சமரச உடன்படிக்கையில் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் நானும், வாதியும், சக்திவேல் மற்றும் சுரேந்தரன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள்.வாதி அவ்வாறு கையொப்பம்

செய்யவில்லை என்றும் நாங்களே ஒரு ஆவணம்உருவாக்கி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அசல் ஆவணம் அவரிடம்தான் உள்ளது. அசல் உடன்படிக்கை ஆவணம் வாதியிடம் இருப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. உடன்படிக்கைக்கான முத்திரைதாள் யார் வாங்கினார் என்றால் வாதிதான் கொண்டுவந்தார். ஆனால் அவர் நேரிடையாக வாங்கினாரா அல்லது வேறு நபர்கள் மூலம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. உடன்படிக்கையில் யார் முதல் சாட்சி கைகொப்பம் செய்தார்கள் என்றால் சக்திவேல். உடன்படிக்கையை யார் எழுதினார் என்றால் வாதிதான் தயார் செய்து கொண்டு வந்திருந்தார். 2 வது கையொப்பம் யார் போட்டார் என்றால் அந்த நேரத்தில் எங்களுடன் இருந்த எனது மகள் கீர்த்தனா போட்டார். அந்த உடன்படிக்கை ஆவணம் பி.வா.ஆ- 1 எத்தனை பக்கம் கொண்டது என்று எனக்கு நினைவில் இல்லை. அந்த உடன்படிக்கை பத்திரத்தில் நான் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் 1 கையொப்பம் போட்டேன். வாதியும் 1 கையொப்பம் போட்டார் என்று நினைக்கிறேன். உடன்படிக்கை பத்திரத்தின் அசல் வேண்டும் என்று நான் கேட்கவில்லையா என்றால் சக்திவேலிடம்தான் எனது கையொப்பம் வேண்டி உடன்படிக்கை பத்திரத்தை வாதி கொடுத்து அனுப்பியிருந்தார். நான் கையொப்பம் போட்டு அனுப்பினேன். வாதி கையொப்பம் செய்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் கையொப்பம் போட்டதை போனில் கேட்டு நான் உறுதி செய்தேன். பி.வா.சா-ஆ. 1 நாங்கள் வழக்கிற்காக உருவாக்கிய ஆவணம் என்றால் சரியல்ல. நான் கொடுத்த காசோலைகள் திருப்பப்பட்டதால் வாதி 13.01.2021 ல் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அறிவிப்பு அனுப்பினது உண்மை ஆனால் நான் காசோலை கொடுக்கவில்லை. விழுப்புரம் இந்தியன் வங்கி கிளையில் எனக்கு 6231389590 என்ற வங்கி கணக்கு எண் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா-ஆ. 1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் வாதி வேலை செய்யும்போது அந்த காசோலையை திருடி சென்றுள்ளார். வாதி காசோலைகை திருடி சென்றதாக எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. 13.01.2021 தேதியிட்ட வாதியின் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் காசோலையை கொடுக்கும்போதே 04.12.2020 க்கு பிறகு வங்கியில் தாக்கல் செய்து வசூலித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி கொடுத்தேன் என்றும், வாதி 06.01.2021 ல் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதியின் காசோலை ஒன்றை திருடி சென்று 22 லட்சம் தொகைக்கு நிரப்பி அதன் அடிப்படையில் அசல் வழக்கு எண்.93/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தரவேண்டி பணத்திற்கு வாதி கொடுத்த காசோலை அடிப்படையில்தான் அந்த வழக்கு போட்டேன். வாதி எனக்கு எவ்வித தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. காசோலை வாதி திருடிவிட்டது எப்போது

தெரியும் என்றால் எனக்கு அவர் எப்போது திருடினார் என்று தெரியாது. எனக்கு தெரியவந்தபோது காவல்துறையில் புகார் கொடுத்தேன். உட்லட்ண்ஸ் ஒட்டல் முன்பு நிறுத்தி வைத்திருந்த எனது இருசக்கரவாகனத்தில் வைத்திருந்த காசோலை புத்தகம், அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்கள் காணாமல் போனதாக நான் புகார் கொடுத்தேன். அந்த பகுதியில் நிறைய கடைகள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளது என்றால் சரிதான். கடைகளில் சிசிடிவி கேமாராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் பார்த்துவிட்டுதான் வழக்கு அதாவது சிஎஸ் ஆர் போட்டார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. அந்த புகார் நகல் இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் ரசீது (சிஎஸ்ஆர்) தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வங்கி கணக்கில் வாதி கொடுத்த காசோலை அடிப்படையில் 21.01.2020 ல் 10 லட்சமும், 02.03.2020 ல் 10 லட்சமும், 26.06.2020 ல் 8 லட்சமும், வரவாகியுள்ளது என்றால் சரிதான். வாதி என்னிடம் வேலை செய்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி என்னிடம் வேலை செய்தார் என்பதற்கு சாட்சியம் உள்ளது. வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காகவே வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யவேண்டும் என்றால் சரியல்ல.